RBI/2009-2010/54
DGBA.CDD.No.H…16/13.01.299/2009-10 ஜூலை 1, 2009
ஆஷாதா 9, 1931(S)

தலைவர் / நிர்வாக இயக்குனர்
பாரதீய ஸ்டேட் வங்கி மற்றும் துணை வங்கிகள்
17 தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்
ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி/ஐடிபிஐ வங்கி / ஹெச்.டி.எஃ.சி.வ/யு.டி.ஐ. வங்கி / ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லி.

அன்புள்ள ஐயா,

**நிவாரண / சேமிப்புப் பத்திரங்களுக்கு நியமன வசதி பற்றி**
**<u>தொகுப்புச் சுற்றறிக்கை</u>**

நிவாரண / சேமிப்புப் பத்திரங்களுக்கான நியமன வசதிகள் பற்றி, ரிசர்வ் வங்கியின் மைய அலுவலகத்தில் அரசு மற்றும் வங்கி கணக்குகள் துறை அவ்வப்போது வெளியிட்டு வருகிறது. பொது கடன் அலுவலகங்கள் / முகவர் வங்கிகளுக்கு மேற்கண்ட தலைப்பில் அனைத்து நடப்பு செயல் உத்தரவுகளையும், ஒரே இடத்தில் கொண்டிட, நிவாரண / சேமிப்புப் பத்திரங்களுக்கு நியமன வசதி பற்றி மாற்றப்பட்ட தொகுப்புச் சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30ஆம் தேதி வரை புதுப்பிக்கப்படுகிறது. அதற்கேற்ப, திருத்தப்பட்ட சுற்றறிக்கை 30.6.2009 வரையிலான மாற்றங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. எங்களது இணையதளமான www.rbi.org.in என்பதில் பார்க்க வசதி உண்டு.

தயவு செய்து பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

உங்களது உண்மையுள்ள

(இந்திரா நாணு)
பொது மேலாளர்

MC.I.2

**தொகுப்புச் சுற்றறிக்கை**
**நிவாரண / சேமிப்புப் பத்திரம் வைத்திருப்போருக்கு**
**நியமன வசதிகள்**

பாரதீய ரிசர்வ் வங்கி
அரசு மற்றும் வங்கிக் கணக்குகள் துறை
மத்தியக் கடன் பிரிவு
மைய அலுவலகம், மும்பை

## <u>தொகுப்புச் சுற்றறிக்கை</u>

### நிவாரண / சேமிப்பு பத்திர திட்டங்கள்
### நியமன வசதி

(i) வாக்குறுதிப் பத்திரம்(Promissory Note) அல்லது வைத்திருப்பர் பத்திரம் வடிவில் இல்லாத நிவாரண/சேமிப்பு பத்திரங்களில் தனியாக அல்லது கூட்டாக முதலீடு செய்தோர் ஒருவரையோ அல்லது அதற்கு மேற்பட்டவரையோ நியமித்து, நியமித்தவரின் இறப்பிற்கு பிறகு அந்த பத்திரத்தைப் பெற்று அதற்குரிய தொகையை நியமனதாரர் பெறவும் முடியும். எனினும் அவ்வாறு நியமிக்கப்படுபவர்களுக்கு, அந்தப் பத்திரத்தினை வைத்துக் கொள்ளும் தகுதி வேண்டும்.

(ii) பத்திரம் முதிர்வடையும் காலத்திற்குள் நியமனம் செய்யவேண்டும்.

(iii) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் நியமனம் செய்யப்படும்பொழுது எவரேனும் ஒருவர் இறந்தால், பத்திரத்தின் உரிமை உயிரோடிருக்கும் நியமனதாரர்களுக்குத்தான் சேரும்.

(iv) பத்திர கணக்கு வைத்திருப்பவர் தாம் செய்யும் நியமனத்தை மாற்றவோ/நீக்கவோ வேண்டுமெனில் இந்திய ரிசர்வ் வங்கிக்கோ / அதற்கென நியமிக்கப்பட்ட பொது / தனியார் துறை வங்கிக்கோ முன்கூட்டியே எழுத்தில் கொடுக்க வேண்டும்.

(v) நியமிக்கப்பட்டவர் வயது வராதவராக இருந்தால் பத்திர ஏட்டுக் கணக்கு வைத்திருப்பவர் தன்னுடைய இறப்பிற்குப் பிறகு பத்திரத்தையோ அல்லது தொகையையோ, நியமிக்கப்பட்டவரின் வயது வராத காலத்தில் பெற்றுக்கொள்ள 18 வயதிற்குமேற்பட்ட எவரையும் அமர்த்தலாம்.

(vi) பத்திர ஏட்டுக் கணக்கு வைத்திருப்பவர்கள் பத்திர ஏட்டுக் கணக்கில் உள்ள ஒவ்வொரு வைப்பிற்கும் அந்நியமனம் பத்திரம் முதிர்வடையும் காலத்திற்குள் செய்யப்பட வேண்டும். தனி நியமனம் செய்துவைக்க அனுமதி உண்டு

(vii) அலுவலகங்கள் / முகைமை வங்கிகள் ஆகியவை நியமனம் பெற்றதற்கான ஒப்புதலை வெளியிடலாம்.

(viii) 6.5 சதவீத சேமிப்பு பத்திரங்கள், 2003 (வரி விதிப்பல்லாத) மற்றும் 8 சதவீத சேமிப்பு (வரி விதிப்புள்ள) பத்திரங்கள், 2003 விஷயத்தில், தனிப்பட்ட முறையில் வைத்திருப்பவர் குடியிருப்பவர் அல்லாத இந்தியரை (NRI), பத்திர முதலீட்டை / வட்டியை பெறுவதற்கு நியமனதாரர் ஆக்கலாம். வட்டி கொடுப்பு / முதிர்வுத் தொகை விஷயத்தில் என்.ஆர்.ஐ.க்கள் அவர்களுக்கு உள்ள சட்டங்களால் நிர்வகிக்கப்படுகிறார்கள்.

**விதிவிலக்குகள் – நியமனம் கீழ்க்கண்டவைகளுக்கு அனுமதிக்கப்படுவதில்லை**

(a) பத்திர சான்றிதழ் / பி.எல்.ஏ.வை 18 வயதிற்கு உட்பட்டவரின் சார்பாக வயது வந்தவர் வைத்திருக்கும்பொழுது;

(b) பத்திர சன்றிதழ் வைத்திருப்பவருக்கு அதன்மூலம் லாபகரமான வட்டி போன்றவை இல்லாமலும் ஆனால் ஒரு அதிகாரி என்ற முறையிலோ அல்லது பொறுப்பாளர் என்ற முறையிலோ வைத்திருந்தால்;

**<u>நியமனத்தை நீக்குதல்</u>**

சேமிப்பு பத்திர விஷயத்தில், நியமனம் கீழ்க்கண்டவைகளில் நீக்கப்படுகிறது.

(a) பத்திரச் சான்றிதழ் வைத்திருப்பவர் பொது கடன்அலுவலகம் மற்றும் முகவர் வங்கிகளுக்கு நியமனத்தை மாற்றுதல் அல்லது நீக்குதலுக்கு விண்ணப்பித்து, மற்றும் அந்த மாற்றுதல் அல்லது நீக்குதல் அந்த அலுவலகத்தால் முறையாக பதிவு செய்யப்படும்பொழுது

(b) பத்திரச் சான்றிதழ் வைத்திருப்பவர் அதனை அடுத்தவருக்கு மாற்றிக் கொடுக்கும்பொழுது

இந்த துறையின் பல்வேறுபட்ட சுற்றறிக்கைகளின் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட தொகுப்புச் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன. அவைகளாவன:

i. (Ref.Memorandum of Procedure Page3)
ii. (Ref.CO.DT.13.01.201/4887/2000-01 dt. 16-2-2001)
iii. (Ref.CO.DT.13.01.201/4854/2000-01 dt. 19-3-2001)
iv. (Ref.CO.DT.13.01.298/H-3410/2003-04 dt. 20-12-2003)
v. (Ref.CO.DT.13.01.298/H-3426/2003-04 dt. 20-12-2003)
vi. (Ref.DGBA.CDD.No.H-2173/13.01.299/2008-09 dt. Sept. 2, 2008